1999 மார்ச் 23]

என்னுடைய இயக்கத்தைச் சேர்ந்த திரு. அம்பிகாபதி அவர்களுடைய அருமைத் தந்தையார் அவர்கள் என்ற வகையில் அந்த ஈடுபாடு எனக்கு உண்டு.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலங்கிழார் தொடர்பாக இந்த அரசு ஒரு நூற்றாண்டு விழாவை நடத்தியது. அதிலே, அவருக்குச் சிறப்பு செய்யப்பட்டிருக்கிறது. அவருடைய இரண்டு நூல்கள் மறுபதிப்புச் செய்ய ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்வளவு சிறப்பாக மங்கலங்கிழார் அவர்களுடைய பிரச்சினையைத் தொடர்ந்து எடுத்து, அலசி ஆராய்ந்து வருகிற — நீண்ட நாட்களாக அலசி ஆராய்ந்து வருகிற — நம்முடைய உறுப்பினர் மாண்புமிகு இராமன் அவர்கள், அந்த விழாவிற்கு ஏனோ வரவில்லை. ஆனால், ஊர்க்காரர்கள் எல்லாம் திரண்டு வந்திருந்தார்கள். அவருக்கு மட்டும் வர வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்று கருதுகிறேன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலங்கிழார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை, அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று வேண்டுகோள் விட்டதே நான்தான். அதற்காக, அந்த விழாவை எடுத்ததற்காக, மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அந்த விழா நடைபெற்ற நாளில், நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், என்னுடைய தொகுதியிலே, நான்கைந்து பகுதிகளிலே வந்து சிறப்பு செய்ய ஒப்புதல் அளித்து, எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. ஆகவே, அந்த ஓரிரு மணி நேர அவகாசத்திலே, அந்தக் கடமையில் தவறிய உறுப்பினராக நான் இருந்துவிட்டேன். இருப்பினும், அன்னாருக்கு சிறப்பு செய்த தமிழக அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 142, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

142—

சிங்காரவேலர் வாழ்க்கை வரலாற்றைப் படமாக்குதல்

***14644—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 23

சிங்காரவேலரைப்பற்றி மாணவர்கள் அறிந்துகொள்ள அவரது வாழ்க்கை வரலாற்றைப் பாடமாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது பாடநூல்கள் யாவும் அச்சிடப்பட்டு, மாணவர்கள் பயன்படுத்தி வருவதால், அடுத்தமுறை பாடநூல்கள் மாற்றி எழுதப்படும்போது, சிங்காரவேலனாரின் வாழ்க்கை வரலாற்றைப் பாடநூல்களில் சேர்ப்பதற்குப் பாடநூல் தயாரிப்புக் குழுவினைப் பரிசீலிக்குமாறு அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. குத்தாலம் பி. கல்யாணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவுடைமை இயக்கத்தை இந்தியாவில் தோற்றுவித்தவர்களில் ஒருவரும், மூட நம்பிக்கையை எதிர்த்து, விஞ்ஞான ரீதியில் அரிய பல கட்டுரைகளை எழுதியவரும், இன்னும் சொல்லப்போனால், பேரறிஞர் அண்ணா அவர்களால், மயிலாப்பூரிலே பிறந்திருந்தால், மாஸ்கோவிலே சிலை கேட்டிருப்பார்கள் என்று சொல்கிற அளவுக்குப் பெருமைப்படத்தக்கவருமான சிங்காரவேலனாரின் வாழ்க்கை வரலாறு அடுத்த ஆண்டு பாடநூல்களில் சேர்க்கப்படும் என்று மாணபுமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேர்க்கப்படும் என்ற உறுதியைக் கூற அமைச்சருக்கு உரிமை கிடையாது. சேர்ப்பது பற்றிப் பரிசீலியுங்கள் என்று பாடநூல் கழகத்தைக் கேட்டுக்கொள்ளத்தான் உரிமையுண்டு. கேட்டுக்கொண்டுவிட்டேன் என்றுதான் தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் விழிப்படைவதற்கு முன்பு விழிப்படைந்த மறக்க முடியாத ஒரு மகத்தான மனிதர் சிங்காரவேலர். அவர் வாழ்ந்த காலத்தில் வலியுறுத்திய அறிவியல்பூர்வமான கருத்துக்களைத் தமிழ்நாட்டுப் பாடத் திட்டத்திலே இணைத்துக்கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1999 மார்ச் 23]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல்பூர்வமான அடிப்படைக் கருத்துக்களை யார் சொன்னாலும், அவை ஒருவருக்கே தொடர்பு உடையதல்ல. அறிவியல்பூர்வமான கருத்துக்கள் பாடப் புத்தகங்களில் இடம்பெற வேண்டிய பகுதிகள் இடம்பெற்று வருவது உண்மை. ஆனால், சிங்காரவேலனார் அவர்களுடைய பெயரால் செய்யக்கூடிய வாய்ப்புகள் சற்றுக் குறைவு. அவருடைய வரலாறு, அவருடைய சமூகத் தொண்டு, அவருடைய நாட்டுப் பணி, இன்னும் சொல்லப்போனால், பொதுவுடைமை இயக்கப் பணி என்று இடம் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தால்தான் வரலாறு என்ற முறையில் இடம்பெறும்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாருடைய உற்ற நண்பராக, மிகச் சிறந்த சீர்திருத்தவாதியாக, பகுத்தறிவுவாதியாக வாழ்ந்த மரியாதைக்குரிய சிங்காரவேலனார் அவர்களுடைய கட்டுரைத் தொகுப்புகளும் மற்றவையும் உலகத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவை ஆய்வுக்குரியனவாகவும் இருக்கின்றன. எனவே, அவற்றைக் கல்லூரிகளிலே பாடப் புத்தகங்களிலே சேர்க்கக்கூடிய அளவிற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் சொல்வதற்காக மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அறிவியல் துறையில், உலகத்தில் அறிவியல் விஞ்ஞானிகள் கண்ட உண்மைகளைத்தான் சிங்காரவேலனார் அவர்கள் நமக்கு எடுத்துச் சொன்னார்கள். அவர்களே கண்டுபிடித்த அறிவியல் உண்மைகள் என்று எதையும் கூறிக்கொள்ள முடியாது. Neither invention nor discovery. அவர்கள் உலகத்தார் அறிந்த உண்மைகளை, இந்த நாடு, தமிழர்கள், தமிழ்நாட்டு மக்கள் அறியாத ஒரு நிலையில் கண்மூடித்தனத்திலே இருக்கிறார்கள் என்பதற்காகப் பகுத்தறிவு விளக்கங்களை நமக்குக் கொடுத்தார்கள். அதைப் பரப்புகிற பணியைத்தான் நாம் ஓரளவு செய்து கொண்டிருக்கிறோம். தந்தை பெரியார் அவர்களுக்கு அதனாலேதான் சிங்காரவேலனாரிடத்திலே

ஈடுபாடு. ஆனால், அறிவியல் கருத்துக்களைச் சொல்கிறபோது நியூட்டன் தொடங்கி ஐன்ஸ்டீன் வரையில் வெவ்வேறு விதமான அந்தக் கருத்துக்கள் பள்ளி மாணவர்களுடைய வயதிற்கு மற்றும் படிப்பிற்கு ஏற்ற முறையில் இடம் பெறுகின்றன. அதிலே ஓர் அத்தியாயமாக சிங்காரவேலனார் இடம்பெறக்கூடிய வாய்ப்பில்லை. பெரியார் அவர்கள் விஞ்ஞான கருத்துக்களைச் சொல்கிறபோது பெரியார் அவர்களுடைய பெயர் அதிலே இடம் பெறாது. ஆனால், மக்களை பகுத்தறிவு வழியிலே திருப்புவதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் இடம்பெறும். எனவே, அந்த முறையிலேதான் அந்தக் கருத்துக்களைப் பாடநூல் திட்டத்தில் இடம்பெறச் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோராலும் பாராட்டப்படுகிற மிகச் சிறப்பிற்குரிய சிங்காரவேலனார் பற்றிய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லி வருகிற இந்த வேளையில், மாமேதை சிங்காரவேலனாருடைய திருவுருவப் படத்தை நமது சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, சட்டப்பேரவையில் வைப்பதற்குரிய திருவுருவப் படங்கள் வேறு; மக்களுடைய மனதிலே வைத்து பாராட்டப்பட வேண்டிய படங்கள் வேறு. மக்கள் மனதிலே வைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கொள்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *143* மற்றும் *144*, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய இவ்விரு வினாக்களும் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

வினா எண் *145*, திரு. செ. மதிவாணன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.